செய்தி வெளியீடு எண்:688 நாள் : 21.12.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு திட்டங்களின் ஒன்றான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இன்று (21.12.2015) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது சீர்மிகு திட்டங்களில் ஒன்றான ‘‘மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டம்’’ குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று (21.12.2015) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 30.6.2011 அன்றைய நாளில் அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள 1.85 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

அதன்படி, முதற் கட்டமாக 2011–12ஆம் ஆண்டில், ரூ.1,370 கோடி ஒதுக்கீட்டில், 25 லட்சம் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக, 2012–13ஆம் ஆண்டில், ரூ.2000 கோடி ஒதுக்கீட்டில், 35 லட்சம் மகளிருக்கும்,

மூன்றாவது கட்டமாக, 2013–14ஆம் ஆண்டில் ரூ.1500 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், 35 லட்சம் மகளிருக்கும்,

நான்காவது கட்டமாக, 2014–15ஆம் ஆண்டில், 45 லட்சம் மகளிருக்கும், வழங்கப்பட்டன.

மேலும், ஐந்தாவது கட்டமாக, 2015–16 ஆம் ஆண்டில், 45 லட்சம் மகளிருக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் பெறப்பட்டு, பயனாளிகளுக்கு பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் ரூ. 4000 கோடி இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இத்திட்டத்திற்காக 8,870 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1 கோடியே 54 லட்சம் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மகளிருக்கு வழங்கப்படும் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகிய பொருட்களின் தரங்களை சோதனை

செய்து சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களின் விவரம் மற்றும் நிறுவனங்கள் பொருட்களுக்கு அளித்த சான்றுகளின் விவரம், மாவட்டங்களில் பொருட்களை தர சோதனை செய்தல், பயனாளிகளுக்கு விநியோகம் செய்தல் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார்கள்.

மேலும், நிறுவனங்கள் இதுவரை வழங்கிய எண்ணிக்கை, வழங்க வேண்டிய எண்ணிக்கை, மற்றும் நிறுவனங்களால் பொருட்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்ட விபரம், பொருட்களை பாதுகாப்பாக வைக்கும் கிடங்குகள் பற்றிய விவரம், மாவட்டங்களில் செயல்படும் சேவை மையங்கள் ஆகியவை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் பொருட்களை உடனடியாக பயனாளிகளுக்கு வழங்க வேண்டும் என்றும், இதற்காக மாவட்ட நிர்வாகத்திற்கு தகுந்த அறிவுரை வழங்க வேண்டுமென்றும், பயனாளிகளுக்கு வழங்குவதில் எவ்வித காலதாமதம் செய்யக் கூடாது என்றும் தெரிவித்தார்கள்.

மேலும், மாவட்டங்களில் உள்ள பொருட்கள் வைக்கப்படும் கிடங்குகளின் பாதுகாப்பு, சேவை மையங்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை மாவட்ட மற்றும் மாநில அலுவலர்கள் அவ்வப்போது கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மேலும் இக்கூட்டத்தில், இத்திட்டத்தின் முழு இலக்கினை 20.1.2016க்குள் அடைந்திடும் வகையில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு கே. சத்யகோபால், இ.ஆ.ப. அவர்கள், வருவாய்த் துறை செயலாளர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஆணையர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேலாண்மை இயக்குநர் திரு. கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள், மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**